# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 174 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 20.09.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# தொழில் முதலீடு மாநாட்டில் பங்கேற்பு; முதலமைச்சர் விஜய் மீண்டும் வெளிநாடு பயணம்




முதல்-அமைச்சர் விஜய்மீண்டும்வெளிநாடு செல்கிறார். அடுத்த ஆண்டு ஜனவரியில் அவர் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறும் உலகப் பொருளாதாரமாநாட்டில் பங்கேற்கிறார். இதன் மூலம் தமிழகத்தில் தொழில் முதலீடு மற்றும் வளர்ச்சி நடவடிக்கைக்கு முக்கியத்துவம்கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல்-அமைச்சர் விஜய், சுவிட்சர்லாந்தின்டாவோஸ்கிளோஸ்டர்ஸ்நகரில்அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல்22ம்தேதிவரை நடைபெறவுள்ள உலக பொருளாதார மன்றத்தின் ஆண்டு கூட் டத்தில் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உலகின் முக்கிய அரசியல் தலைவர்கள், கொமில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கும்இந்தமாநாட்டில் தமிழக முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்பதன் மூலம், தமிழகத்தின் முதலீடு மற்றும் தொழில் வளர்ச்சி தொடர்பான நடவடிக்கைகளுக்கு மேலும் முக்கியத்துவம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக பொருளாதார மன்றத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அலோய்ஸ் ஸ்விங்ஜி, நிர்வாக இயக்குநர் மாரோன் கைரூஸ் ஆகியோரின் அழைப்பை ஏற்று முதல்-அமைச்சர் விஜய் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார். ஆண்டுதோறும்நடைபெறும் இந்தக் கூட்டத்தில் 100க்கும்மேற்பட்டநாடுகளைச் சேர்ந்த அரசுகளின் பிரதிநிதிகள், 1,000க்கும் மேற்பட்ட முன்னணி உலகளாவிய நிறுவனங்கள், சர்வ தேச அமைப்புகள், சிவில் சமூகபிரதிநிதிகள்,கல்வியாளர்கள் மற்றும் ஊடகங்களைச்சேர்ந்தவர்கள் பங்கேற்பார்கள்.

## டாவோஸ் பயணம்

உலகின் பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் ஒரே இடத்தில் கூடும் இந்த மாநாட்டில், பொருளாதாரம், முதலீடு,தொழில்வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்படு வதுடன் உலகளா விய பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை உருவாக்குவது குறித்தும் விவாதிக்கப்படும்.

முதல்-அமைச்சர் விஜய்யின் டாவோஸ் பயணம் தமிழக அரசின் முதலீடு மற்றும் தொழில் கொள்கை தொடர்பான அணுகுமுறையிலும் மாற்றத்தைஏற்படுத்தக்கூடும்என அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.முதலீட்டைஈர்ப்பது மற்றும் தொழில் கொள்கைகள் தொடர்பான விவாதங்களில் அரசியல் தலைமை நேரடியாகவும் அதிக அளவிலும் பங்கேற்கும் சூழல் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் அணுகு முறையில் மாற்றம்

இது குறித்து மூத்த அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், டாவோஸ் மாநாட்டில் முதல்- அமைச்சர் பங்கேற்பதன் மூலம் அரசின் அணுகு முறையில் மாற்றத்தை கொண்டு வர வாய்ப்புள்ளது. முதலீட்டு வசக்குவிப்பு மற்றும் தொழில் கொள்கை தொடர்பானவிவாதங்களில் அரசியல் தலைமை அதிக அளவில் பங்கேற்கும் வாய்ப்பை இது ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார். மாநிலங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே முதலீடுகளை ஈர்ப்பதற்கான போட்டி அதிகரித்து வரும் நிலையில், தமிழகமும் சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதிலும்,வளர்ந்து வரும் தொழில் துறைகளுக்கான முக்கிய மையமாகதன்னைநிலைநிறுத்திக் கொள்வதிலும் கவனம் செலுத்தி வருகிறது.

முதல்-அமைச்சர் விஜய் நேரடியாக விஜய் நேரடியாக பங்கேற்பு

குறிப்பாக, எதிர்காலத்தில் வேகமாக வளரக்கூடியதொழில் துறை களில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த சூழலில், டாவோஸ் உலக பொருளா தார மன்றத்தில் முதலமைச்சர் விஜய் பங்கேற்பது தமிழகத்தின் முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்தசர்வதேச அளவிலான கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார மாநாட்டில்முன்னாள் தொழில்துறை அமைச்சர்கள் மட்டுமே பெருமளவில் பங்கேற்றுவந்தநிலையில், தற்போது, முதல்-அமைச்சர்விஜய்நேரடியாக இந்நிகழ்வில் கலந்து கொள்ள இருப்பதாக கூறப்படுவது பெரிதும் கவனம் ஈர்த்துள்ளது.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது




சென்னை:

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப் பேரவை தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது.

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப் பேரவை தொகுதிகளிலும்அக்டோபர்மாதம் 6 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முடிந்து, பரிசீலனை நிறைவடைந்துள்ள நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியானது.

அதன்படி, மதுராந்தகம் சட்டப் பேரவை தொகுதியில் தவெக சார்பில் முன்னாள் எம்எல்ஏ மரகதம் குமரவேல், திமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன், அதிமுகசார்பில்முன்னாள் எம்எல்ஏ கணிதா சம்பத், நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகி ராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுகந்தி ஆகியோர் களத்தில் உள்ளனர். இவர்களுடன் சுயேட்சை வேட்பாளர்கள் 22 பேர் என மொத்தம் 27 பேர் போட்டியிடுகின்றனர்.

அதே போல் இடைத்தேர்தல் நடைபெறும் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் வேட்புமனு தாக்கல் கடந்த 9-ந் தேதி தாராபுரம் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் தொடங்கியது. கடந்த 16-ந்தேதி வேட்புமனு தாக்கல் முடிந்தது. அதன்படி, த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு மற்றும் நா.த.க. வேட்பாளர்கள் என மொத்தம் 51 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான பரிசீலனை 17-ந் தேதி நடந்தது.இதில்தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் சத்தியபாமா, தி.மு.க. வேட்பாளர் சுகன்யா, அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் லட்சுமணன் உள்பட 22 வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டது. மீதமுள்ள 29 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது.

# கோவை, மதுரை திருச்சி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் 2 நாள் கனமழை வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட 15மாவட்டங்களில் நாளை (செப்.20) மற்றும் நாளை மறுதினம் (செப்.21) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.



இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடக்கு கடலோர ஆந்திரா முதல் மன்னார் வளைகுடாவரை,தமிழக பகுதிகள்வழியாகசுமார் 0.9 கி.மீ. உயரத்தில் ஒரு வடக்கு - தெற்கு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. (செப்.20),நாளை மறுதினமும் (செப்.21) நீலகிரி,கோவை,கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இந்த இரு தினங்களும் இதர மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்க ல்பட்டு, திருவள்ளூர், சிவகங்கை, ஈரோடு, ராமநாதபுரம், நாமக்கல், கரூர், புதுக்கோட்டை மற்றும் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.22-ம்தேதிமேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்,விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்கள் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி,மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். இந்த இரு தினங்களும் இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சிவகங்கை, ஈரோடு, ராமநாதபுரம், நாமக்கல், கரூர், புதுக்கோட்டை மற்றும் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.22-ம்தேதிமேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்,விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, டெல்டா மாவட்டங்கள் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி,மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொழிலாளர் துறையின் சார்பில், அந்தியூரைச்சேர்ந்த ரவி, பவானியைச் சேர்ந்த சரவணன், சூரியம்பாளையத்தைச் சேர்ந்த அஜீத் ஆகிய கட்டுமானத் தொழிலாளி கட்டுமானப்பணியிடத்து விபத்து மரணமடைந்தததையடுத்து அவர்களது குடும்பங்களுக்கு நிவாரண நதியுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (19.09.2026) வழங்கினார்.

## பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு
# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் களப்பயணம்



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம்,தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள், தலைமை ஆசிரியர்லெ.சொக்கலிங்கம் தலைமையில் தேவகோட்டை பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

அஞ்சல்துறையின் தேவகோட்டைதலைமை தபால் அதிகாரி வீரபாண்டியன் மாணவர்களை வரவேற்றார். தொடர்ந்து, பாஸ்போர்ட் அலுவலர்கள் ஷர்மிளா மற்றும் நாகதேவி ஆகியோர் பாஸ்போர்ட் விண்ணபிக்கும் நடைமுறை, தேவையான ஆவணங்கள், முகவரி மற்றும் பிறந்த தேதி சரிபார்ப்பு உள்ளிட்ட அலுவலக செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக விளக்கினர்.

மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். நிறைவாக ஆசிரியை சிவரஞ்சனி நன்றி கூறினார். களப்பயணத்திற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் மற்றும் ஆசிரியை ஆர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் "ஒழுங்கு நடவடிக்கை, நீதிமன்ற வழக்குகள் மற்றும் நடத்தை விதிகள் குறித்து" அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (19.09.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, மாவட்ட வருவாய் அலுவலர் (ஓய்வு) எம்.ரத்தினசாமி உட்பட பலர் உள்ளனர்.

## மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல்
# அதிமுக வேட்பாளர் கனிதா சம்பத்தை ஆதரித்து முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி வாக்கு சேகரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் தமிழகத்தில் தற்பொழுது தாராபுரம் மற்றும் மதுராந்தகம் பகுதியில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு ஐந்து முனை போட்டி நிலவு வருகிறது. இன்று முதல் அனைத்து கட்சியினரும் சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மதுராந்தகம் தொகுதி அதிமுக வேட்பாளர் கனிதா சம்பத் அவர்களை ஆதரித்து அதிமுக முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி ஈசூர் பூதூர் ஆகிய பகுதிகளில் சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பொதுமக்களிடையே பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி தமிழகத்தில் தற்போது நடந்த தேர்தலில் வானத்தை வில்லாக வளைக்கிறோம் தமிழகத்தில் தேன் ஆறும் பாலாறும் ஓடும் என கூறி மக்களின் மனதை மாற்றி வாக்குகளை பெற்றுள்ளனர்.

உங்கள் நன்மைக்காக மீண்டும் எடப்பாடி யாரின் ஆட்சி தமிழகத்தில்கொண்டுவர கனிதாசம்பத்திற்கு வாக்களிக்க வேண்டும் என பா வளர்மதி வாக்குகளை சேகரித்தார். இக்கூட்டத்தில்செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்ற எஸ் ,ஆறுமுகம் . மாநிலங்களவை உறுப்பினர் தனபால். மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆணுறு பக்தவச்சலம். மதுராந்தகம் வடக்குஒன்றியசெயலாளர் குமரவேல். ஒன்றிய குழு பெருந்தலைவர் கீதா கார்த்திகேயன். கருங்குழி பேரூராட்சி முன்னாள் தலைவர் மஞ்சுளாபுருஷோத்தமன். பாஜக மாவட்ட செயலாளர் டாக்டர் பிரவீன் குமார். உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், கூரபாளையம் நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் குடிமைப்பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு அல்லாத பணிகள்) மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (19.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், நசியனூர் சாமிக்கவுண்டம்பாளையத்தில் நடைபெற்ற பொதுவிநியோகத்திட்ட குறைதீர்க்கும் நாள் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (19.09.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பரந்தாமன் அவர்கள் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க தலைவர் கோ. ப. அன்பழகன் அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். அப்பொழுது முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு., காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர்கள் த. மோ. அன்பரசன்., க.சுந்தர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. செல்லம்., எம்.எஸ். தரணிவேந்தன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மதுராந்தகம் அருகே கோழியாளத்தில்
# தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் நினைவு நாளில் அவரது சிலைக்கு வி.சி.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம்அடுத்தகோழியாளம் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரரும்ஒடுக்கப்பட்ட மக்களின் போராளியுமான திவான் பகதூர் தாத்தா ரெட்டமலை சீனிவாசன் அவர்களின்நினைவு நாளில் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தயாநிதி ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர், அன்புச்செல்வன், மண்டல செயலாளர் ஆதவன், முன்னாள் துணை பொதுச்செயலாளர் விடுதலை செழியன் மாநிலநிதிசெயலாளர் காஞ்சி தமிழினி

ஆகியோர் தாத்தா மாவீரன் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த ஊரான கோழியாளம் கிராமத்திற்கு சென்று அவருடைய திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில்கட்சியின்மாநில மண்டல மாவட்ட ஒன்றிய நகர பேரூர் மற்றும் முகாம் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் அரசு கலைக்கல்லூரி அமைத்து தரப்படும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் மரகதம் குமாரவேல் தேர்தல் பரப்புரை



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வேடந்தாங்கல், கரிக்கிலி, வெள்ளபுத்தூர், பாப்பநல்லூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தமிழகவெற்றி கழக வேட்பாளர் மரகதம் குமரவேல் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது வேடந்தாங்களுக்கு வருகை தந்த வேட்பாளருக்கு பூங்கொத்து கொடுத்தோம், ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேசிய மரகதம் குமரவேல்

வேடந்தாங்கல் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு எத்தனை பட்டா மின் இணைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தாம் வெற்றி பெற்றால் சட்டமன்றத்தில் பேசி உடனடியாக மக்களுக்கு கிடைத்த வழிவகை செய்வோம் எனவும் மதுராந்தகம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி கட்டித் தரப்படும் எனவும்

மேலும் தமிழக அரசு அளித்த வாக்குறுதியின் படி 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் 150 கூட்டமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும்

மேலும் தமிழக அரசு தேர்தலில் அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் மக்களுக்கு கிடைத்திட சட்டமன்றத்தில் பேசுவேன் என்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் இதில் மதசார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி சார்பில் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், நசியனூர் சாமிக்கவுண்டன்பாளையம் நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (19.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# மதுரை அரவிந்த் கண் காப்பு அமைப்பு தனது 50 ஆண்டுகால சேவையை பொன்விழாவாக கொண்டாடுகிறது



1976ம் ஆண்டு துவங்கிய அரவிந்த் கண் காப்புஅமைப்பின் 50ஆம் ஆண்டு பொன்விழா, 20 செப்டம்பர் 2026 அன்று மதுரையில் நடைபெற இருக்கிறது. இவ்விழா, அரவிந்தின் 50 ஆண்டுகால சேவைப் பயணத்தை நினைவுகூரும் வகையில் அமைய இருக்கிறது

அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனர் தலைவர் டாக்டர் ஜி. வெங்கடசாமி தொலைநோக்குப் பார்வையில் தொடங்கிய இந்தப் பயணம், இன்று பல்வேறு துறைகளில் விரிவடைந்துள்ளது.

தற்போது அரவிந்த் கண் காப்பு அமைப்பில் 16 மருத்துவமனைகள், 120 Vision Centres மற்றும் 8 சமூக கண் மருத்துவ மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைவருக்கும் தரமான கண் மருத்துவ சேவை வழங்குவது அரவிந்தின் முக்கிய நோக்கமாக தொடர்ந்து இருந்து வருகிறது.

பாதிக்கும் மேற்பட்ட நோயாளிகள் இலவசமாகவோ அல்லது மானிய விலையிலோ சிகிச்சை பெறுகின்றனர். 2026 மார்ச் மாதம் வரையிலான தகவலின்படி, அரவிந்த் கண் மருத்துவமனைகள் தொடங்கிய காலத்திலிருந்து 9.07 கோடி வெளிநோயாளர் வருகைகளையும், 1.16 கோடி அறுவை சிகிச்சைகளையும் பதிவு செய்துள்ளன. ஆண்டுதோறும் 3,000-க்கும் மேற்பட்ட இலவச கண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கண்மருத்துவசேவையுடன், கல்வி, ஆராய்ச்சி, கண் வங்கி, பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் குறைந்த செலவிலான கண்மருத்துவப்பொருட்கள் தயாரிப்பு ஆகிய துறைகளிலும் அரவிந்த் முக்கிய பங்காற்றி வருகிறது.

LAICO மூலம் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள கண் மருத்துவ நிறுவனங்களுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. Aurolab மூலம் தயாரிக்கப்படும் கண் மருத்துவப் பொருட்கள் உலகின் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

11 படுக்கைகளுடன் தொடங்கிய அரவிந்தின் 50 ஆண்டுகால பயணம், கோடிக்கணக்கான மக்களின் பார்வையை பாதுகாக்கும் ஒரு பெரிய சேவை இயக்கமாக வளர்ந்துள்ளது. இந்த பொன்விழா, கடந்த 50 ஆண்டுகால சேவையை நினைவுகூருவதுடன், எதிர்காலத்திலும் அனைவருக்கும் தரமான மற்றும் அணுகக்கூடிய கண் மருத்துவ சேவையை வழங்கும் அரவிந்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

# மக்கள் ஆதரவு இருந்தால் தொடர்ந்து ஹீரோவாக நடிப்பேன் மதுரை விமான நிலையத்தில் நடிகர் சூரி பேட்டி



பிரபல நகைச்சுவை நடிகரான சூரி சமீபகாலமாக ஹீரோவாகவும் நடித்து வருகிறார் அவர் அண்மையில் ஹீரோவாக நடித்து வெளிவந்த மண்டாடி திரைப்படம் மகத்தான வெற்றி பெற்றது தொடர்ந்து மண்டாடி திரையிடப்பட்டுள்ள திரையரங்குகளுக்கு நேரில் சென்று ரசிகர்களை சந்தித்து வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக இன்று மதுரை ரிச்சி திரையரங்கத்தில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் மண்டாடி திரைப்படத்தை தனது குழுவினர்களுடன் சென்று பார்க்க உள்ளார் இதற்காக சென்னையில் இருந்து மதுரை வந்த நடிகர் சூரிக்கு விமான நிலையத்தில் அவரது ரசிகர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த நடிகர் சூரி மண்டாடி மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

தமிழகம் மட்டுமல்லாது ஆந்திரா தெலுங்கானாவிலும் மிகப்பெரிய வெற்றி பெறும் நாளை ராமநாதபுரம் மாவட்டம் தொண்டிக்கு சென்று மண்டாடி திரைப்படத்தை பார்க்க உள்ளதாகவும் அப்போது அப்பகுதி மீனவர்களின் சந்தித்து பேச உள்ளதாகவும் தெரிவித்தார்

மண்டாடி திரைப்படம் மீனவர் சமுதாயத்தினருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும் என்றார்படம் வெற்றி பெற்றதை தொடர்ந்து நடிகர் சூரி ஹீரோவாக மட்டும் நடிப்பாரா என்ற கேள்விக்கு நீங்கள் சொல்லுங்கள் நான் எவ்வாறு நடிக்க வேண்டும் என செய்தியாளர்களைப் பார்த்து கேள்வி எழுப்பினார் தொடர்ந்து பேசியவர் நான் தொடர்ந்து ஹீரோவாக நடிக்க மக்கள் ஆதரவுதான் காரணம் என்றார்.மக்கள் சூரியை அவர்களில் ஒருவராக பார்க்கிறார்கள் என்றார்

மண்டாடி திரைப்படம் 100கோடிவசூல்சாதனை படைத்து விட்டதா என்ற செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு? மண்டாடி படம் 100 கோடியை தொட்டுவிட்டது இது தொடர்பாக நாளை அறிவிப்பு வரும்.

தல - தளபதி லண்டனில் சந்தித்தது குறித்த கேள்விக்கு?

தல-தளபதி இருவரும் நண்பர்கள் தான் எங்கு சந்தித்தாலும் சந்தோஷம் தான் என்றார்

# கோவையில் பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க கண்காட்சி



கோவையில் பண்டிகை மற்றும் சமூக உணர்வைக் கொண்டாடும் வகையில், "தீபாவளி உட்சவ் 2026 எனும் கண்காட்சி கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் இன்று துவங்கியது.

1952ம் ஆண்டு, நிறுவப்பட்ட, பெண்களுக்கான ஒரு சமூக மன்றமாக, ஆர். எஸ். புரம் லேடிஸ் கிளப், இருந்து வருகின்றது. இந்த அமைப்பின் சார்பாக தீபாவளி உட்சவ் 2026 எனும் கண்காட்சி, கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் செப்டம்பர் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில், காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்றது. அமைப்பின் தலைவர் ஜெயஸ்ரீ பிரசாத் தலைமையில் நடைபெறும் இந்த இரண்டு நாள் நிகழ்வை, பூஜா சுதாகர் ராவ் மற்றும் சந்தீப் கவுர் ஆனந்த் ஆகியோர் துவக்கி வைத்தனர். கடைசி நேர தீபாவளி கூட்டத்திற்காகக் காத்திருக்க வேண்டாம் - எங்களுடன் தீபாவளிக்குத் தயாராகுங்கள்!" என்ற உணர்வுடன், இந்த உட்சவ் கண்காட்சியில், புடவைகள், ஃபேஷன் நகைகள், காலணிகள், உணவுப் பரிசுகள், வாழ்க்கை முறைப் பொருட்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய, பண்டிகைக் காலப் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாக, பெண் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமாக அமைந்துள்ளது. இங்குள்ள அரங்குகளில் கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பெண் தொழில்முனைவோரால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொழில்முனைவோருக்கு அவர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் தொழில்களை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குவதோடு, அவர்களை பரந்த சமூகத்துடன் இணைப்பதையும் இந்த உட்சவம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த கண்காட்சி, ஷாப்பிங் மற்றும் பொழுதுபோக்கையும் தாண்டிய ஒரு கொண்டாட்டமாக மாறும் எனவும், தீபாவளி உட்சவம் 2026, வெறும் ஒரு கண்காட்சியை விட மேலானதாக இருக்கும் என்றும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த இரண்டு நாள் கொண்டாட்டத்தில், இன்று கரோக்கி இசை மாலையும், ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் உற்சாகமான தம்போலா மாலையும் இடம்பெற உள்ளது. மேலும் இங்கு மெழுகுவர்த்தி தயாரிக்கும் பட்டறை, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் மற்றும் பிற சுவாரஸ்யமான அனுபவங்கள் கொண்டாட்டங்களை மேலும் சிறப்பிக்க உள்ளது

### கோவை பங்கஜா மில் சாலையில் உள்ள

# ஜெம் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் ரோஸ் தினம் கொண்டாடப்பட்டது



தமிழகத்தில் தலைசிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான கோவை ஜெம் மருத்துவமனையின்,புற்றுநோய்சிகிச்சை மையம், பல நூற்றுக்கணக்கான புற்று நோயாளிகளுக்கு சிகிச்சைஅளித்துள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 22ம் தேதி புற்று நோயால் பாதிக்க பட்ட நோயாளிகளுக்கு அன்பையும், ஆதரவையும் காட்ட வேண்டும் என்ற கருத்தை முன்னிறுத்தி, இச்சமூதாயத்தை ஊக்குவிக்கும் வகையில், இந்தநாளைரோஸ்தினமாக கொண்டாட பட்டு வருகின்றது.ஜெம் புற்றுநோய் சிகிச்சை மையத்தின் சார்பாக ரோஸ் தின நிகழ்ச்சி இன்று மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் புற்றுநோய் சிகிச்சை முடிந்த 100க்கும் மேற்பட்ட நோயாளிகள் கலந்து கொண்டனர் இந்த நிகழ்வை ஜெயா பழனிவேலு,மற்றும் பிரபாபிரவீன் ராஜ், ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். ஜெம் புற்றுநோய் சிகிச்சை மையத்தின் இயக்குனர் டாக்டர் பரத் ரங்கராஜன் வரவேற்புரையாற்றினார். ஜெம் மருத்துவமனைகளின் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ், ஜெம் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் உள்ள அதிநவீன சிகிச்சை வசதிகள் பற்றி எடுத்துரைத்தார். ஜெம் மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர் பழனிவேலு அனைவரது மத்தியிலும் தன்னம்பிக்கை உறையாற்றினார் அப்பொழுது அவர் கூறியதாவது.

கடந்த 50 ஆண்டுகளாக புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த தனது பயணத்தை எடுத்துரைத்தார். மேலும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை துறையை தேர்வு செய்ய தனது உத்வேகம் அளித்த நிகழ்வுகளை தெரிவித்தார்.இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை சிங்காநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் ஸ்ரீகிரி பிரசாத்,கலந்து கொண்டு புற்று நோய் சிகிச்சை முடித்தவர்களுக்கும், அவர்களின் பராமரிப்பாளர்களுக்கும் தனது உரை மூலமாக ஊக்கமளித்தார். இதனை தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா நோயாளிகள், ஊக்கமடையும் வகையிலும், மாவட்ட அரசு பள்ளி ஆசிரியர்களும் ஜெம் புற்றுநோய் சிகிச்சை மையத்தில் பெண்களுக்கான இலவச மாமோகிராம் திட்டத்தை துவக்கி வைத்தார் இறுதியாக அறுவை சிகிச்சை புற்றுநோயியல் துறை தலைவர் டாக்டர் சிவக்குமார் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்.

# தமிழக மாணவர்கள் வெளிநாடுகளில் படிக்க புதிய திட்டம்



கோவையில் ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் , சர்வதேச பல்கலைக்கழகப் படிப்புகளுக்கான பாதையை வழங்கும் வகையில், இன்டோ குவாலிஃபிகேஷன்ஸ் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. இதன் மூலமாக தமிழக மாணவர்களின் எதிர்காலம் நல்ல நிலைக்கு உருவாக்க படும் என தகவல்...

சிவா டெக்ஸ்யார்ன் லிமிடெட் குழுமத்தின் ஒரு நிறுவனமான ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் இங்கிலாந்தைச் சேர்ந்த கல்வி வழிகாட்டும் இன்டோ குவாலிஃபிகேஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலமாக, கோவையில் உள்ள பயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் வளாகத்தில் இன்டோ குவாலிஃபிகேஷன்ஸ் நிறுவனத்தின் பவுண்டேசன் மற்றும் சர்வதேச முதல் ஆண்டு படிப்பு கல்வித் திட்டங்களை மாணவர்கள் பயில முடியும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய

இன்டோ பல்கலைக்கழகத்தின் கூட்டாமை நிறுவனத்தின் கல்விக் கூட்டாண்மை இயக்குநர் டாக்டர் ரிச்சர்ட் சாமுவேல்ஸ், ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் சுஜனா அபிராமி சுந்தரராமன்,

பயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ்-ன் தலைமை செயல்பாட்டு அதிகாரி டாக்டர் ஆர். நந்தகோபால் ஆகியோர் கூறியதாவது..

இன்டோ குவாலிஃபிகேஷன்ஸ் நிறுவனம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள 100-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் கல்விப் பாதை ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், மாணவர்கள் தங்களது பவுண்டேசன் அல்லது சர்வதேச முதல் ஆண்டு படிப்பை இந்தியாவிலேயே நிறைவு செய்து, அதன் பின்னர் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள ஒப்பந்தம் செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் படிப்பின் இரண்டாம் ஆண்டில் சேரும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இன்டோகுவாலிஃபிகேஷன்ஸ் நிறுவனம் பயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் - ஐ அங்கீகரிக்கப்பட்ட கல்வி மையமாக அங்கீகரித்துள்ளது. இந்தியாவில் கோவையில் இன்டோ பவுண்டேசன் மற்றும் சர்வதேச முதல் ஆண்டு படிப்பை வழங்கும் ஒரே கல்வி நிறுவனமாக பயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் செயல்படுகிறது.இதன் மூலம் வெளிநாடுகளில் இளங்கலைப் படிப்பைத்தொடரவிரும்பும் மாணவர்கள், முதல் ஆண்டு படிப்பை இந்தியாவிலேயே குறைந்த செலவில் முடித்து, முன்னணி சர்வதேச பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறுகின்றதாக கூறினர்.

# தென்காசியில் போக்சோ, பிசிஆர் நீதிமன்றங்கள்

## 21ம் தேதி காணொலி மூலம் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி திறந்து வைக்கிறார்

தென்காசியில் போக்சோ மற்றும் பி.சி.ஆர். நீதிமன்றங்கள் வருகிற 21ம் தேதி துவக்கப்படுகிறது. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி காணொலி காட்சி மூலம் துவக்கி வைக்கிறார்.



தென்காசி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இதே வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம், முதன்மை சார்பு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் மன்றம், குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றம், தென்காசி புதிய பஸ்ஸ்டாண்ட் கூடுதல் சார்பு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது, தென்காசி மாவட்டத்தில் உள்ள போக்சோ சட்டம் 2012ன் கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் (போக்சோ நீதிமன்றம்) தென்காசி புதிய பஸ் நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ளது. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்முறை) சட்டம் 1989ன் கீழ் உள்ள வழக்குகளை பிரத்தியேகமாக விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் (பி.சி.ஆர். நீதிமன்றம்) தென்காசி அருகே உள்ள மேலகரம் எழில் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் துவக்க விழா வரும் 21ம் தேதி தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. விழாவிற்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி தலைமை தாங்கி காணொலி கலந்துரையாடல் மூலம் துவக்கி வைக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும் தென்காசி மாவட்டத்திற்கான பொறுப்பு நீதிபதியுமான கே.குமாரேஷ் பாபு காணொலி காட்சி மூலம் சிறப்புரையாற்றுகிறார். தென்காசி முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேல் வரவேற்று பேசுகிறார். இந்த விழாவில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.அசோக்குமார், அட்வகேட் அசோசியேசன் தலைவர் எஸ்.முருகேசன், பார் அசோசியேசன் தலைவர் சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட திரளானோர் கலந்து கொள்கின்றனர். இறுதியில் தென்காசி மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மன்ற நீதிபதி ஜெ.கிறிஸ்டல் பபிதா அனைவருக்கும் நன்றி கூறுகிறார்.



தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி கீழப்பாவூர் ஒன்றியம் அதிசயபுரம் அ ம மு க செயலாளர் ஜோதிமணி அவர்கள் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் கழக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் முன்னிலையில் திமுக கழகத்தில் இணைந்தார் உடன் வீரகேரளம் புதூர் சாமி உள்ளார் கழகத்தில் இணைந்த ஜோதிமணி அவர்களுக்கு கழக வேட்டி அணிவித்து வரவேற்றார்

# செயின் பறிப்பு வழக்கில் இருவர் கைது

## கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கை






அன்ஷூல்நகர் வழிகாட்டுதலின் கீழ், மாவட்ட காவல்துறையினர் குற்றச்சம்பவங்களை விரைந்து கண்டறிந்து குற்றவாளிகளை கைது செய்ய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, மார்த்தாண்டம் காவல் நிலைய குற்ற எண் 474/2026, BNS 304(2) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட செயின் பறிப்பு வழக்கில், காவல்துறையினர் துரிதமாக விசாரணை மேற்கொண்டு சம்பவத்தில் தொடர்புடைய திருவனந்தபுரம் நெய்யாற்றங்கரை பகுதியை சேர்ந்த அனில் குமார் என்பவரின் மகன் ஜோமோன்(21) மற்றும் திருவனந்தபுரம் நெய்யாற்றங்கரை பகுதியை சேர்ந்த பிரதீப் குமார் என்பவரின் மகன் ஆதர்ஷ்(20) ஆகியோரை அடையாளம் கண்டு கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் 7½ கிராம் எடையுள்ள தங்க நகை மீட்கப்பட்டது.



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சின்னப்பநாயக்கன்பாளையம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. பள்ளியின் ★பொறுப்புத் தலைமை ஆசிரியர் திருமதி மலர்விழி கண்காட்சியை துவக்கி வைத்தார். அறிவியல் ஆசிரியர்கள் மாதேஸ்வரன், முகமது முகைதீன், ராஜேந்திரன் ஆகியோர் மாணவர்களின் படைப்பாற்றல்களை ஒருங்கிணைத்து சிறப்பான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். காற்றாலை மின்சாரம், பேட்டரி கார், நீர் சுத்திகரிப்பு நிலையம் முதலான அறிவியல் படைப்புகளை மாணவர்கள் திறம்பட விளக்கி கூறினர்.

# Flames, smoke seen near Saudi's Riyadh airport, several flights cancelled after 'major problems': Reports



*Residents in Saudi Arabia's Capital city Riyadh on Saturday witnessed smoke and flames rising from an area near the international airport, news agencies AFP and Reuters reported. This comes even as flight-tracking data showed "major problems" with the arrival and delay of aircraft at the airport.*

*"In the direction of the airport we saw black smoke and fire," AFP cited one of the residents as saying. Meanwhile, data on Flightradar 24 showed an arrival delay index and departure delay index of 5 in its 5-point disruption index. A delay index between 3.5 and 5 on the website signals major problems with long delays and several canceled flights, according to Flightradar 24.*

*This comes after Saudi Arabia warned of a "hostile aerial threat" and issued emergency alerts across the country, including in its capital, late Friday and early Saturday. The alert in Riyadh was a first for the Saudi Capital since the latest escalation of hostilities with Yemen's Iran-backed Houthis.*

# தூத்துக்குடியில் பா.ஜ.க. நிர்வாகிகள் பயிற்சி முகாம்

## பொன்.ராதாகிருஷ்ணன், திருநாகரன் பங்கேற்பு



தமிழக பா.ஜ.க. சார்பில் கட்சி நிர்வாகிகளின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையிலும், கட்சியின் கொள்கைகள், அமைப்பு செயல்பாடுகள் மற்றும் மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து நிர்வாகிகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையிலும், மாநிலம் முழுவதும் மாவட்ட வாரியாக நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. சார்பில் இரண்டு நாள் நிர்வாகிகள் பயிற்சி முகாம் செப்டம்பர் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் தூத்துக்குடியில் உள்ள மாவட்ட பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. முகாமின் முதல் நாளான செப்டம்பர் 18-ஆம் தேதி, 'கட்சியின் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து, கருத்தியல் பரிமாணங்கள் மற்றும் கட்சியின் கொள்கைகள் குறித்து நிர்வாகிகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மேலும், 'தேசத்தின் முன் உள்ள சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளில் நமது முயற்சிகள்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் நாட்டின் வளர்ச்சி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து நிர்வாகிகளுடன் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

இரண்டாம் நாளான செப்டம்பர் 19-ஆம் தேதி, நிர்வாகிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு உடற்பயிற்சி மற்றும் யோகா நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து, கட்சியின் அடிப்படை அமைப்பான பூத் மேலாண்மை, நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய களப்பணிகள் மற்றும் அமைப்பு ரீதியான செயல்பாடுகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், மத்திய அரசின் ஏழைகளுக்கான நலத்திட்டங்கள், இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகங்களின் முக்கியத்துவம், அவற்றை கட்சிப் பணிகளில் பயன்படுத்தும் விதம் உள்ளிட்ட தலைப்புகளில் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

இந்த பயிற்சி முகாமின் பொறுப்பாளர்களாக மாநில பொதுக்குழு உறுப்பினர் திருநாகரன் மற்றும் முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு, பல்வேறு தலைப்புகளில் நிர்வாகிகளுக்கு வழிகாட்டி வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பல்வேறு அணிகள் மற்றும் பிரிவுகளின் மாநில நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

# தூத்துக்குடியில் புரட்சி பாரதம் கட்சி சார்பில்

## போல்டன்புரத்தில் இரட்டைமலை சீனிவாசனார் 81வது நினைவு நாள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



தூத்துக்குடி போல்டன்புரத்தில் அமைந்துள்ள திவான் பகதூர் பெண்ணுரிமைக் காவலர் இரட்டைமலை சீனிவாசனார் அவர்களின் 81-வது நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, இன்று காலை 11.30 மணியளவில் அவரது உருவச் சிலைக்கு புரட்சி பாரதம் கட்சியின் தூத்துக்குடி மாநகர் மாவட்டம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

புரட்சி பாரதம் கட்சியின் தேசியத் தலைவர், இளம் புரட்சியாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பூவை எம். ஜெகன்மூர்த்தி அவர்களின் ஆணைக்கிணங்கவும், கட்சியின் பொதுச் செயலாளர் டி. ருசேந்திரகுமார், மாநிலச் செயலாளர்கள் பரணி மற்றும் பி. மாரி ஆகியோரின் வழிகாட்டுதலின்படியும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

தூத்துக்குடி மாநகர் மாவட்டச் செயலாளர் சமூகப் போராளி மா. மாரிச்செல்வம் தலைமையில், இரட்டைமலை சீனிவாசனார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவரது சமூகப் பணிகள் மற்றும் பங்களிப்புகளை நினைவுகூர்ந்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

தமிழ்நாடு பறையர் பாதுகாப்புப் பேரவை நிறுவனர் தலைவர் புலி இளவரச பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், புரட்சி பாரதம் கட்சி தூத்துக்குடி மாநகர் மாவட்டப் பொருளாளர் மு. மணிகண்டன், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் த. மகேந்திரன், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி மண்டல துணைச் செயலாளர் வழக்கறிஞர் அர்ஜுன், முன்னாள் மண்டலச் செயலாளர் முரசு தமிழப்பன், தமிழ்நாடு பறையர் பாதுகாப்புப் பேரவை ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் விக்கி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும், திமுக, அதிமுக, தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், இயக்கத் தோழர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இரட்டைமலை சீனிவாசனார் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# பிரதமர் மோடி பிறந்தநாள் விழா: தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக சார்பில் கோவிலில் சிறப்பு பிரார்த்தனை!



பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் விமரிசையாக நடைபெற்றது.

தூத்துக்குடியில் தெற்கு மாவட்ட பாஜகவின் 15 மண்டலங்களிலும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள் வெடித்தும் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை விமரிசையாக கொண்டாடினர்.

இதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி அருள்மிகு பாகம்பிரியாள் சமேத சங்கர ராமேஸ்வரர் திருக்கோவிலில், பிரதமர் நரேந்திர மோடி நீண்ட ஆயுளுடனும், நல்ல ஆரோக்கியத்துடனும் தொடர்ந்து நாட்டிற்கு சேவை செய்ய வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, வடக்கு ரத வீதியில் பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.எம். ராஜேஷ், மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், கிழக்கு மண்டலத் தலைவர் சண்முகசுந்தரம், ஓபிசி மாநில செயற்குழு உறுப்பினர் பாலமுருகன், வணிகப் பிரிவு மாவட்டத் தலைவர் செந்தில், ஓபிசி மாவட்ட பொதுச் செயலாளர் வன்னியராஜ், மாவட்டத் துணைத் தலைவர் காளிராஜா, அணிப் பிரிவு மாவட்டத் தலைவர்கள் ஓம் பிரபு, ஜெயக்குமார், உஷாதேவி வினோத், மண்டலப் பொறுப்பாளர்கள் ஜெயரூபி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.